[திரு. சி. கோவிந்தசாமி] [2006 ஆகஸ்ட் 29

மத்திய அரசோடு மாநில அரசு உரிய முறையில் தொடர்பு கொண்டு, தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய கோதுமையை உரிய காலத்திலே பெற்று, பொதுமக்களுக்கு ration விநியோகத்தின்மூலம் அது கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம், உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு, 8,000 மெட்ரிக் டன் கோதுமை தேவைப்படுகிறது. இப்போது 3,783 மெட்ரிக் டன் கோதுமைதான் வந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்பேரில் டெல்லிக்குச் சென்று, சம்பந்தப்பட்ட மாண்புமிகு மத்திய அமைச்சர் சரத் பவார் அவர்களைப் பார்த்துக் கடிதம் கொடுத்திருக்கிறோம். ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி, இங்கே முதலமைச்சர் அவர்களைச் சந்திக்கிறபொழுது, அவர்களும் அதை வலியுறுத்தியிருக்கிறார்கள். உடனே, இந்த மாதமே அனுப்புவதாகச் சொன்னார்கள். நேற்றையதினம்கூட நாங்கள் fax கொடுத்திருக்கிறோம். எனவே, கட்டாயம் வரும்; வந்தவுடனே இது நிறைவு செய்யப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

(இ) பாபநாசம் தாலுகா, ஆற்றில் விழுந்து இறந்த ஆதிதிராவிட மாணவியரின் குடும்பத்தினர்க்கு நிதியுதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைக்கண்ணு, என்ன? சொல்லுங்கள்.*

திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், பாபநாசம் தாலுகாவில், புள்ளபூதங்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் இரண்டு ஆதி திராவிட மாணவிகள், தனியாக tuition சென்றுவிட்டுத் திரும்பும்போது, அவர்கள் கரையோரத்தில் வந்தபோது, தவறி ஆற்றில் விழுந்து இறந்துவிட்டார்கள். 6 ஆம் தேதி இறந்தவர்களில், 6 ஆம் தேதியன்று ஒருவருடைய சடலத்தையும், 7 ஆம் தேதியன்று ஒருவருடைய சடலத்தையும் கைப்பற்றி, பிரேதப் பரிசோதனை செய்து, பெற்றோரிடத்தில்*

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2006 ஆகஸ்ட் 29] [திரு. இரா. துரைக்கண்ணு]

ஒப்படைத்துள்ளார்கள். இதுவரை, இறந்த மாணவியர்களுடைய குடும்பத்திற்கு எந்தவிதமான நிதியுதவியும் வழங்கப்படவில்லை. ஆகவே மாணவிகளை, அந்தக் குழந்தைகளை இழந்து தவிக்கும் அந்தக் குடும்பத்திற்கு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நிதியுதவி வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்வு குறித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்பொழுதுதான் என்னுடைய கவனத்திற்கு இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னதாகவே எனக்கு அவர்கள் தெரிவிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருந்தால், நிச்சயமாக அதுகுறித்து நான் அறிந்து, அதற்கு எந்தவகையிலே அரசின், மூலமாக உதவிகளைச் செய்திருக்க முடியுமோ, அதைச் செய்திருக்க இயலும். எனவே, இப்போது நீங்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய தகவலின் அடிப்படையிலும், அதிகாரிகளைக் கொண்டு, தொடர்ந்து அந்த இடத்திலே விசாரித்தும், அரசு எந்தவகையிலே அவர்களுக்கு உதவிகள் செய்ய முடியும் என்பதைப் பரிசீலித்து, நிச்சயமாக ஆவன செய்யப்படும்.

3. கவன ஈர்ப்பு

திருப்பதியாபுரம் கிராமத்தில் சிறுத்தை நடமாட்டத்தால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பீதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி *55*—ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதி, மணிமுத்தாறு பேரூராட்சிப் பகுதியிலே, திருப்பதியாபுரம் என்ற மலையடிவாரக் கிராமத்தில், *7—8—2006*—லிருந்து தினமும் இரவு நேரங்களில் புலிகள் வந்து, அட்டகாசம் செய்வதோடு, ஆடுகள், மாடுகள், நாய்களையும் அடித்துக் கொன்று விடுகின்றன. எந்த நேரத்திலும் ஆட்களுக்கும் ஆபத்து வரும் நிலை உள்ளதால், மக்களும் பெரும் அச்சத்தில் உள்ளனர். எனவே, மக்களின் அச்சத்தைப் போக்கவும், புலிகளின்